**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 407/2024**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 12.02.2026.**

| **Name : கணேஷ்குமார்** | **Taluk :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக உள்ளேன். கடந்த 04.01.2024ம் தேதியன்று மதியம் 12.00 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திருமதி.ராஜாத்தி, வயது 65, க/பெ பழனிசாமி என்பவரை அவருடைய மருமகள் தேவகி என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 04.01.2024 –ம் தேதி காலை 7 மணியளவில் வீட்டின் அருகே தெரிந்த இரண்டு நபர்கள் தடியால் அடித்ததாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது கையில் வீக்கம் 2 x 3 cm அளவில் காணப்பட்டது. 2) நுண்கதிர் படம் எடுத்து பார்த்த போது அவரது இடது கையில் phalanx proximal f1 3) 3 x 3 cm அளவில் பின்னந்தலையில் வீக்கம் காணப்பட்டது. 4) வலது தோள்பட்டையில் 3 x 3 cm அளவில் வீக்கம் காணப்பட்டது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் அனுமதித்து 7 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு கையில் ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று தான் சான்றளிக்கப்பட்டது. தோள்பட்டையில் மற்றும் தலையில் ஏற்பட்டது சாதாரண காயம் ஆகும். கையில் ஏற்பட்ட காயம் எலும்பு முறிவு என்பதை நுண்கதிர் படம்

வாயிலாக தெரிந்து கொண்டேன். **மேற்படி விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.14.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

4) ராஜாத்தி என்பவருக்கு நான் மட்டுமே முழு சிகிச்சை அளித்தேனா என்றால் மாறி மாறி பணிக்கு வரும் மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். நான்கு காயங்களில் எந்த காத்திற்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் எலும்பு மருத்துவருக்கு தான் தெரியும். 3 வது காயத்திற்கு இடது கையில் பெருவிரலில் ஏற்பட்ட காயத்திற்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் ஆமாம். நுண்கதிர் படம் எடுத்து பார்த்தேன். போலீசார் விசாரிக்கும் போது நுண்பதிர் படம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

5) மருத்துவ குறிப்பில் நுண்கதிர் படம் எடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். காயம் பட்ட நபருக்கு மூன்றாவதாக ஏற்பட்ட காயத்திற்கு எலும்பு முறிவு மருத்துவர் தான் சரியான கருத்துரை வழங்க முடியும் என்றால் சரிதான். என்னிடம் உள்ள ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். 3 வது காயத்திற்கு எந்த மருத்துவர் சிகிச்சை அளித்தாரோ அந்த மருத்துவர் தான் கருத்துரை வழங்க முடியும் என்றும் நான் சிகிச்சை அளிக்காத காயத்திற்கு கருத்துரை வழங்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.13 12:19:43 +0530

Judicial Magistrate No.II,
Mettur.